அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நஷ்டம் ஏற்பட வில்லை. அங்கே கொள்முதல் செய்யக்கூடிய அரிசி மட்டுமல்ல, பருப்பு இது போன்ற பல பொருள்கள் கொஞ்சம் சப்-ஸ்டாண் டர்டாக கொள்முதல் செய்யப்பெற்று, அங்கே நானே கோடவுனுக்குப் போய் நூறு மூட்டை பருப்பை பார்த்தேன், அந்த பருப்பினுடைய தரமே குறைந்து போய் மக்கள் வாங்க மறுத்துக் கொண்டிருந்த சமயம் அது. அதை கம்மி விலைக்குப் பின்னாலே விற்று இருப்பார்கள். பர்ச்சேஸ் பண்ணுவதிலே இப்படிப்பட்ட தனி மனிதனுடைய ஆதிக்கமும் ஊழலும் பாதிக்காமல் இருப் பதற்கு பாதுகாப்பு என்ன செய்யப்படும் என்பது என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பாதுகாப்பை ஜனங்களை உத்தேசித்து செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்பொது அறிவிக்கப்பட்டுள்ள கொள்முதல் கொள்கைப்படி உள்ளூரிலே விளைகின்ற விளைபொருள்கள் அங்கேயுள்ள வட்டார அளவிலே உள்ள குழுக்கள் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு அந்தப் பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டு வாங்கப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறது. வெளிமாநிலங்களிலிருந்து பருப்பு, சீரகம், வெந்தயம், அரிசி ஆகிய பொருள்கள் வாங்கப்படுகின்றபோது இங்கிருந்து கன்சூமர் ஃபெடரேஷன் மூலமாக டெண்டர் மூலமாக இவைகள் எல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டு வெளி மாநிலங்களிலிருந்து இந்தப் பொருள் கள் வாங்கப்படுகிறது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே பொது மக்கள் அச்சப்படுவதற்கான எதுவும் நிச்சயமாக நடக்காத அளவிற்கு ஒவ்வொரு மட்டத்திலும் இந்த கொள்முதல் கொள்கை வரையறுக்கப்பட்டு குழுக்கள் மூலமாக டெண்டர்கள் மூலமாக இவைகள் வாங்கப்படுவதால் எந்த விதமான பாதிப்பும் பொது மக்களுக்கு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ்.பி. சற்குணம் : தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு ஒரு மாதத்திற்கு சமையல் எண்ணெய் எவ்வளவு வழங்கப் படுகிறது.......... (மணியடிக்கப்பெற்றது).

சான்றளிக்கப்பட்ட வித்துக்கள் விநியோகம்.

*9023. **திரு. செ. நூர்முகமது**

திரு. ஆர். நடேசன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பான்மை விவசாய நிலங்கள், சிறு அளவு உடையவையாக இருப்பதால், சான்றளிக்கப்பட்ட வித்துகள் 5 கிலோ, 10 கிலோ பாக்கெட்டு களில் விநியோகிக்கப்படவேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதை ஏற்க உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) இக்கோரிக்கை வேளாண்மை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இப்பொருள் குறித்து வேளாண்மை இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டபின், அதனைப் பரிசீலனை செய்து அரசு தகுந்த ஆணைகள் வெளியிடும்.

திரு. செ. நூர்முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலான விவசாய விளை நிலங்கள் மிகச் சிறிய அளவுடையதாக இருக்கின்றன. 50 சென்ட் 20 சென்ட், 1 ஏக்கர், 2 ஏக்கர் இவ்வளவுதான். 10 ஏக்கர் 50 ஏக்கர், 100 ஏக்கர் விளை நிலங்கள் பெரும்பாலும் அங்கே இல்லை. ஆகவே, 50 கிலோ, 100 கிலோ அளவில் இந்த சான்றளிக்கப்பட்ட விதைகள் அதிகமாக வழங்குவதனால் அங்கிருக்கின்ற விவசாயிகள் அவற்றை வாங்கி பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய நிலத்தினுடைய அளவைக் கருத்தில் கொண்டு தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகள் வாங்குகின்ற வகையில் 1 கிலோ, 5 கிலோ, 10 கிலோ 20 கிலோ ஆகிய அளவில் உள்ள பாக்கெட்டுகளில் கொடுக்கப்படுகின்ற சான்றளிக்கப்பட்ட விதைகள் அங்கே ஒதுக்கப்படுகின்ற மொத்த விதைகளில் 80 சதவீதம் ஆக இருக்கின்ற வகையில் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 24,000 டன் நெல் 1,195 டன் சிறுதானியங்கள் 2,850 டன் பயறு வகைகள் போன்ற விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 50 கிலோ, 20 கிலோ, 10 கிலோ, 8 கிலோ, 6 கிலோ, 4 கிலோ, 3 கிலோ, 2 கிலோ, 1 கிலோ என்ற அளவில் மினி கட்டுகள் பைகளிலே போட்டு விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கன்னியாகுமரி மாவட்டத்திலே சிறு விவசாயிகள் பெரும்பாலும் இருக்கக் கூடிய காரணத்தினால் இந்த மினி கட்டுகள் ஒரு கிலோ, 2 கிலோ, 3 கிலோ, 4 கிலோ, 5 கிலோ, 6 கிலோ, 8 கிலோ, 10 கிலோ என்ற அளவில் பைகளிலே போட்டு வழங்கப்பட்டால் தான் விவசாயிகளுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்ற கருத்தை இங்கே கேள்வியாக எழுப்பினார்கள். இது பற்றி இயக்குநர் இடத்திற் அறிக்கை கோரப்பட்டிருக்கிறது. அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு விரைவில் முடிவு எடுத்து அறிவிக்கும்.

1990 ஏப்ரல் 23]

9-45 மணி

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக சிறிய விவசாயிகள் கூடுதல் எண்ணிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். 5 கிலோ பாக்கெட்டுகளை இலவசமாக அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. நூர்முகமது அவர்கள் கேட்ட கேள்விக்கு அதற்கான பதிலை அளித்து இருக்கிறேன். இந்த மினி கட்டுகள் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள், அனைவருக்கும் நாம் வழங்குகிறோம். ஆனால், இந்த கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறிய விவசாயிகள் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். 50 கிலோ கொண்ட பைகளில் போட்டுத் தருவதால் விவசாயிகள் பயன்பெறமுடியவில்லை. ஆகவே தான் 1 கிலோ, 2 கிலோ. 3 கிலோ, 4, 5, 10 கிலோ வரைக்கும் உள்ள பைகளில் போட்டு வழங்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்குகின்ற இந்த மினிக்கட்டு 100க்கு 70 சதவீதம் குறையாமல் இந்த சிறிய பைகளில் போட்டு மினி கட்டுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2114, மற்றும் 6766 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவமனை.

* 3538. திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் அரசு மருத்துவமனை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதியில் அல்லது பெண்ணாகரம் தாலுக்காவில் ஒரு அரசு மருத்துவமனை கூட இதுவரையில் இல்லை. 2½ லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள அந்தத் தொகுதியில், அந்த தாலுக்கா மையத்தில் ஒரு அரசு மருத்துவ மனை இதுவரை அமைக்கப்படாதது அந்த மக்களுக்கு பயன் அளிக்காத நிலையில் இருக்கிறது. ஆகவே, அரசு மறு பரிசீலனை செய்து இந்த ஆண்டு திட்டத்தில் அரசு மருத்துவ மனை ஒன்றை திறக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.